ஏமன் நாட்டில் பயங்கரவாதிகள் தாக்குதல்: ராணுவ வீரர்கள் 19 பேர் பலி

ஏமன், ஆக.3–

ஏமன் நாட்டில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 19 ராணுவ வீரர்கள் பலியாகினர்.

தெற்கு ஏமன் நாட்டின் அபியான் மாகாணத்தில் உள்ள அல்–மஹ்ஃபத் ராணுவ தளத்தில் நேற்று பயங்கரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் 19 ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் பல வீரர்கள் காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் அனைவரும் கொல்லப்பட்டனர். ஏமனைச் சேர்ந்த அல் கொய்தா அமைப்பு இத்தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது. முன்னதாக கடந்த வியாழன் அன்று ஏடனில் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட இரட்டைத் தாக்குதலில் 49 பேர் கொல்லப்பட்டனர். முதலாவதாக அங்குள்ள காவல் நிலையத்தில் நடத்தப்பட்ட மனித வெடிகுண்டு தாக்குதலில் 13 காவலர்கள் கொல்லப்பட்டனர். அடுத்தாக ராணுவ முகாமின் மீது பயங்கரவாதிகள் ஏவுகணை தாக்குதல் நிகழ்த்தினர். இதில் புதிதாக பணியில் சேர இருந்த இளம் வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

துபாயில் பணத்தை சாலையில் வீசி வீடியோ வெளியிட்ட வாலிபர் கைது

துபாய், ஆக.3–

துபாயில் பணத்தை சாலையில் நின்றபடி வீசி, வீடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட வாலிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் வாலிபர்கள் வித்தியாசமான செயல்களை செய்து அதனை வீடியோவாக எடுத்து வெளியிடுவது இப்போது டிரெண்டாகி விட்டது. அன்றாடம் ஏதேனும் புதிய செயல்களால் மக்களை ஈர்க்க வேண்டும் என நினைத்து பலரும் பல்வேறு முறைகளை கையாண்டு வருகின்றனர். அப்படியொரு வாலிபர், துபாயில் சாலை ஒன்றில் நிறுத்தப்பட்ட காரின் அருகே நின்று கொண்டு துபாய் பணத்தை வீசி வீடியோவினை எடுத்துள்ளார். பின்னர் இதனை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். இதற்காக அந்த நபர் துபாய் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்து காவல்துறை இயக்குனர் பைசல் அல் காசிம் கூறுகையில், 'துபாய் பணத்தை சாலையில் வீசிய நபரின் வீடியோ குறித்த தகவல் கிடைத்தவுடன் அவரை தேடினோம்.

கண்டுபிடிக்கப்பட்டவுடன் கைது செய்துவிட்டோம். பணத்தை வீச காரணம் என்ன? என அவரிடம் விசாரித்தபோது, தன்னை அதிக பேர் சமூக வலைத்தளத்தில் பின் தொடர வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்ததாக ஒப்புக்கொண்டார்.

காஷ்மீர் என்கவுண்டரில் பயங்கரவாதி சுட்டு கொலை

ஸ்ரீநகர், ஆக.3–

ஜம்மு காஷ்மீரின் பாராமுல்லாவில் பாதுகாப்பு படையினர் நடத்திய என்கவுண்டரில் ஒரு பயங்கரவாதி சுட்டுக்கொல்லப்பட்டான் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பாராமுல்லா மாவட்டத்தின் சோபோர் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அப்பகுதிக்கு சென்ற பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினரை நோக்கி சுடத்தொடங்கினர். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பாதுகாப்பு படையினரும் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். இந்த தாக்குதலில் ராணுவ வீரர் ஒருவர் காயமடைந்தார் என முதல்கட்ட தகவல் வெளியானது. தொடர்ந்து நடந்த தேடுதல் வேட்டையில் பயங்கரவாதி ஒருவன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதித்யா வாசுதேவன் உள்பட

'ஈரான் சிறை பிடித்துள்ள 22 மாலுமிகளை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுங்கள்': முதலமைச்சர் எடப்பாடி அவசரக் கடிதம்

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கரிடம் வலியுறுத்தல்

புதுடெல்லி, ஆக.3–

ஈரான் புரட்சி காவல்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள சென்னையை சேர்ந்த ஆதித்யா வாசுதேவன் உள்ளிட்ட 22 மாலுமிகளை உடனடியாக விடுதலை செய்து தாய்நாட்டுக்கு அனுப்ப வேண்டும்' என்று வலியுறுத்தி முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு இன்று ஓர் அவசரக் கடிதம் எழுதி உள்ளார்

அந்தக் கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது:–

சென்னையைச் சேர்ந்தவர் ஆதித்ய வாசுதேவன். வயது 27. லண்டனில் பதிவு செய்யப்பட்ட 'இம்பெரோ' கப்பலில் இவரும், இவருடன் இந்திய மாலுமிகள் 18 பேர் உட்பட மொத்தம் 22 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது புரட்சி காவல் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

'இம்பெரோ' எனப்படும் அந்தக் கப்பலில் ஆதித்யா வாசுதேவன் மூன்றாம் நிலை அதிகாரியாக பணியில் இருக்கிறார். அரபு நாடுகளில் உள்ள புஜெய்ராவிலிருந்து சவூதி அரேபியாவில் உள்ள ஜுபைல் புஜைரா என்னுமிடத்திற்கு போய்க்கொண்டு இருந்தபோது கடந்த மாதம் 19–ம் தேதி ஈரான் புரட்சி காவல் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இவரோடு இந்திய மாலுமிகள் 18 பேர் உட்பட மொத்தம் 22 பேர் அக்கப்பலில் உள்ளனர்.

தன்னுடைய மகன் சிறைபிடிக்கப்பட்டுள்ள விஷயத்தை ஆதித்யா வாசுதேவனின் தந்தை தமிழக அரசுக்கு தெரிவித்து, மகனை விரைவில் விடுதலை செய்து சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசைக்கேட்டுக்கொண்டுள்ளார்

இந்நிலையில் நீங்கள் உங்களது அதிகாரத்தை பயன்படுத்தி, ஆதித்யா வாசுதேவனையும் அவருடன் சிறைபிடிக்கப்பட்டுள்ள இந்திய மாலுமிகளையும் உடனே விடுவித்து தாயகம் திருப்பி அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்'.

இவ்வாறு அந்த கடிதத்தில் எடப்பாடி கூறியுள்ளார்.

பாரதீய ஜனதா எம்.பி.க்களுக்கு டெல்லியில் 2 நாள் பயிற்சி முகாம்: பிரதமர் மோடி, அமித்ஷா பங்கேற்பு

புதுடெல்லி, ஆக.3–

பாரதீய ஜனதா சார்பில் பாராளுமன்ற எம்.பி.க்களுக்கான 2 நாள் பயிற்சி முகாம் டெல்லியில் இன்று தொடங்கியது. இதில் பிரதமர் மோடி, தேசிய தலைவர் அமித்ஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாரதீய ஜனதா சார்பில் பாராளுமன்றத்திற்கு தேர்வாகியுள்ள உறுப்பினர்களுக்கான 2 நாள் பயிற்சி முகாம் டெல்லியில் இன்று தொடங்கியது. இதன் தொடக்க நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, தேசிய தலைவர் அமித்ஷா, செயல் தலைவர் ஜே.பி. நட்டா உள்பட பலர் பங்கேற்றனர்.

சமீபகாலமாக பாரதீய ஜனதா எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் சர்ச்சைக்குரிய வகையில் பேசுவது, பாலியல் புகார்களில் சிக்குவது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில், இதுபோன்ற பயிற்சி முகாமுக்கு பாரதீய ஜனதா தலைமை ஏற்பாடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சத்தீஸ்கரில் அதிரடிப்படை நடத்திய தேடுதல் வேட்டை: 7 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை

ராய்ப்பூர், ஆக.3–

சத்தீஸ்கர் மாநிலத்தில் அதிரடிப்படை நடத்திய என்கவுண்டரில் 7 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் ராஜ்நந்தகான் பகுதியில் உள்ள சிதகோட்டா வனப்பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர் இன்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த நக்சலைட்கள் தப்பியோட முயன்றனர். இதையடுத்து அதிரடிப்படையினர் துப்பாக்கியால் சரமாரியாக சுடத்தொடங்கினர். இந்த என்கவுண்டரில் 7 நக்சலைட்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என போலீசார் தெரிவித்தனர். தொடர்ந்து அந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தபோது விமானத்தில் இருந்து குதித்த லண்டன் மாணவி பலி

லண்டன், ஆக.3–

35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தபோது விமானத்தில் இருந்து குதித்து உயிரிழந்த மாணவியின் உடலை போலீசார் தேடி வருகின்றனர்.

இங்கிலாந்து தலைநகர் லண்டனை சேர்ந்தவர் அலானா கட்லாண்ட் (வயது 19). இவர் அங்குள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயிரியல் பட்டப்படிப்பு படித்து வந்தார். இந்த நிலையில் அலானா கட்லாண்ட், தொழில்முறை பயிற்சிக்காக ஆப்பிரிக்காவில் உள்ள தீவு நாடான மடகாஸ்கருக்கு சென்றார். அங்கு வடமேற்கு பகுதியில் உள்ள கடற்கரை நகரமான அஞ்சாஜாவியில் தங்கியிருந்து அவர் ஆய்வுபணிகளை மேற்கொண்டு வந்தார்.

கடந்த மாதம் 25ந்தேதி, உயிரினங்கள் குறித்த ஆய்வுக்காக நாட்டின் வடக்கு பகுதிக்கு சென்றார். பின்னர் ஆய்வுகளை முடித்துக்கொண்டு சிறிய ரக பயணிகள் விமானத்தில் அஞ்சாஜாவிக்கு புறப்பட்டார்.

விமானம் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டு இருந்தபோது தனது இருக்கையில் இருந்து எழுந்து சென்ற அலானா கட்லாண்ட் திடீரென விமானத்தின் கதவை திறந்தார். இதனால் பயணிகள் மத்தியில் பதற்றம் உருவானது. என்ன நடக்கிறது என அவர்கள் சுதாகரிப்பதற்குள் அலானா கட்லாண்ட் விமானத்தில் இருந்து கீழே குதிக்க முயன்றார். உடனடியாக அருகில் இருந்த பயணி ஒருவர் அவரது காலை கெட்டியாக பிடித்துக்கொண்டு விமானத்தின் கதவை மூட முயன்றார்.

ஆனால் அதையும் மீறி அலானா கட்லாண்ட் விமானத்தில் இருந்து குதித்தார். அவரது உடல் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அலானா கட்லாண்ட் எதற்காக விமானத்தில் இருந்து குதித்தார் என்பது தெரியவில்லை. இதுகுறித்து மடகாஸ்கர் போலீசார் தீவிரமாக விசாரித்து வருகிறார்கள்.

ஐ.எஸ்.அமைப்புக்கு ஆள் சேர்த்த பெண்ணுக்கு 7 ஆண்டு சிறை

திருவனந்தபுரம், ஆக.3–

கேரளாவில் ஐ.எஸ். அமைப்புக்கு ஆள் சேர்த்த பெண்ணுக்கு 7 ஆண்டு ஜெயில் தண்டனை விதித்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஆப்கானிஸ்தான், சிரியா போன்ற நாடுகளில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் அதிக அளவு நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக காசர்கோடு, கண்ணூர், பாலக்காடு ஆகிய மாவட்டங்களை சேர்ந்தவர்களே அதிக உள்ளனர்.

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தில் கேரள வாலிபர்களை இணைத்த யாஸ்மின் முகம்மது சாகித் என்ற பெண்ணை ஐ.என்.ஏ. அதிகாரிகள் கைது செய்தனர். இவர் கேரளாவில் இருந்து டெல்லி சென்று அங்கிருந்து விமானம் மூலம் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்றபோது கடந்த 2016ம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

அவர்மீதான வழக்கு என்.ஐ.ஏ. சிறப்பு கோர்ட்டில் நடந்தது. இந்த வழக்கில் யாஸ்மின் முகம்மது சாகித்துக்கு 7 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தண்டனையை எதிர்த்து யாஸ்மின் முகம்மது சாகித் கேரள ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த கோர்ட் அவருக்கு விதிக்கப்பட்ட ஜெயில் தண்டனையை 3 ஆண்டுகளாக குறைத்தது.

கேரள ஐகோர்ட்டின் தீர்ப்புக்கு எதிராக ஐ.என்.ஏ. அதிகாரிகள் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். இந்த மனுவை விசாரித்த 2 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச், யாஸ்மின் முகம்மது சாகித்துக்கு ஏற்கனவே என்.ஐ.ஏ. கோர்ட் வழங்கிய 7 ஆண்டு ஜெயில் தண்டனையையே விதித்து தீர்ப்பு கூறியது.

சிதம்பரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் மலிவு விலை மளிகைப் பொருட்கள் விற்பனையை சங்கத் தலைவர் டேங்க். ஆர். சண்முகம் தொடங்கி வைத்தார். பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கத் தலைவர் பன்னீர்செல்வம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க செயலாளர் எம்.ஜி.ரவிச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

காஷ்மீரை மூன்றாக பிரிக்க மத்திய அரசு முடிவு

ஸ்ரீநகர், ஆக.3–

காஷ்மீரை மூன்றாக பிரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் பரவுகின்றன.

ஜம்மு காஷ்மீரில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால், அம்மாநிலத்துக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்படலாம் என வதந்திகள் சமூக வலைத்தளங்களில் பரவின. ஆனால், மத்திய அரசு இந்த தகவலை திட்டவட்டமாக மறுத்தது. தரை, வான் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, அமர்நாத் யாத்திரை நேற்று திடீரென நிறுத்தப்பட்ட நிலையில் காஷ்மீரில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த நிலையில், காஷ்மீரை மூன்றாக பிரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகின்றன.

ஜம்முவை தனி மாநிலமாகவும், லடாக், காஷ்மீரை யூனியன் பிரதேசங்களாகவும் பிரிக்க திட்டம் எனவும் இதற்கான அறிவிப்பை சுதந்திர தினத்தன்று பிரதமர் மோடி அறிவிக்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்ய கூடாது என்ற கோரிக்கை வலுத்து வரும் நிலையில் மத்திய அரசு இந்த புதிய திட்டத்தை முன்வைத்துள்ளதாக தெரிகிறது.

அசாமில் அடித்துக்கொட்டும் கனமழை: வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 88 ஆக உயர்வு

கவுகாத்தி, ஆக.3–

அசாமில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 88 ஆக அதிகரித்துள்ளது என மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

அசாம் மாநிலத்தில் கடந்த சில வாரங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள பல்வேறு மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்யும் மழையால் பிரம்மப்புத்திரா உள்பட பல ஆறுகளில் வெள்ளப்பெருக்கு அபாயகட்டத்தை எட்டியுள்ளது. மாநிலத்தில் உள்ள 12 மாவட்டங்கள் முற்றிலும் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

தேமாஜி, டாரங், பர்பேடா, பிஸ்வநாத், சோனிப்பூர், சிராங், காம்ரூப் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் ஒரு லட்சத்து 65 ஆயிரம் மக்கள் வெள்ளத்தில் சிக்கி தவித்து வருகின்றனர். பல பகுதிகளில் வாகன போக்குவரத்து மற்றும் ரெயில் சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில், கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 88 ஆக அதிகரித்துள்ளது என தேசிய பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேலூர் நாடாளுமன்ற தொகுதி அண்ணா தி.மு.க. வேட்பாளர் ஏ.சி.சண்முகத்தை ஆதரித்து குடியாத்தம் தொகுதி பேராணம்பட்டு நகராட்சி வார்டுகளில் மாநில மகளிரணி துணை செயலாளரும், போளூர் முன்னாள் எம்.எல்.ஏ. எல்.ஜெயசுதா லட்சுமிகாந்தன் வீடு வீடாக சென்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். போளூர் நகர பொருளாளர் வி.சங்கர், ஊராட்சி செயலாளர்கள் எம்.குணசேகரன், எம்.சின்னதம்பி, ஆர். சசிக்குமார் உட்பட பலர் உள்ளனர்.

டிமாண்ட் நோட்டீஸ்

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (மேற்சொன்ன சட்டம்) பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002 (மேற்சொன்ன விதிகள்) விதிகள் 3(1)ன் கீழ், கடன்தாரர்கள், டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ள தொகையை திருப்பச் செலுத்துமாறு மேற்கண்ட சட்டம், பிரிவு 13(2) மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 3–ன்படி IIFL ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (IIFL HFL)/ ((முன்னர் இந்தியா இன்போலைன் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மேற்கண்ட சட்டம் பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இதில் தொடர்புடைய கடன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் கடன் தொகையை திரும்ப செலுத்துமாறு மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். செலுத்த வேண்டிய தொகை, டிமாண்ட் நோட்டீஸ் தேதியில் இருந்து தொகையை செலுத்தும் நாள் வரையிலான வட்டி ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்களின் விவரங்கள், டிமாண்ட் நோட்டீஸ் தேதியான 31 ஜூலை 2018 அன்று உள்ள நிலுவைத் தொகை மற்றும் கடன் தொகையை திரும்ப செலுத்துவதற்காக அளிக்கப்பட்ட பத்திரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்கள் பெயர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்துகள்)
1. ராமசந்திரன் T. துலுக்காணம் 2. சுமதி R (பிராஸ்பெக்ட் எண்./ கடன் கணக்கு எண். 753937)	31.07.2019 ரூ.15,42,645/–	தமிழ்நாடு, சென்னை 600 058, அத்திப்பட்டு, வானகரம் ரோடு, அம்பத்தூர், டி.என்.எச்.பி. எல்.ஐ.ஜி. குடியிருப்பு, பிளாக் எண்.09, 14வது மாடி, ப்ளாட் எண்.31/95 ல் உள்ள சொத்து மற்றும் அதன் துண்டுகளும் பகுதிளும்

மேற்கண்ட கடன்தாரர்கள் IIFL HFL–க்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடு பெற்ற ஆஸ்திகள் மீது IIFL HFL நடவடிக்கை மேற்கொள்ளும். இதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் கட்டணங்கள் கடன்தாரர்களையே சேரும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம்:– 9வது பால்கான் பியூச்சர டவர்ஸ், எண்.10/2, வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 0017 மற்றும்/அல்லது காப்பரேட் அலுவலகம்: மனை எண். 98, பேஸ்–IV, உத்யோக் விஹார், குர்கான், ஹரியானா அவர்களை அணுகலாம்

இடம் : சென்னை
தேதி : 03.08.2019

ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக (ஐஐஎச்எல்)

காணவில்லை

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம் V. சாலை கிராமம்& அஞ்சல் , 112 பொரியர் தெருவில் வசிக்கும் சீத்தாராமன் மகன் எஸ் குமார் ஆகிய நான் கடந்த 25/6/2019 அன்று V. சாலை கிராமத்திலிருந்து விக்கிரவாண்டி தாலுக்கா அலுவலகம் வந்து போது பஸ் நிலையத்தில் நான் வைத்திருந்த பத்திர ஆவண எண் 23 யை காணவில்லை, மேற்படி என்னுடைய பத்திரத்தை எவரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட என்னுடைய முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

S. குமார்
S/O சீத்தாராமன்,
V.சாலை, V. சாலை அஞ்சல்,
விக்ரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்
cell: 9629399683

PUBLIC NOTICE

This is to inform to the general public that, my client P.R.Kesavan, Managing Director of M/S.KUMARAN RESORTS LIMITED, office at No.21, Corporation Colony Main Road, Rengarajapuram, Kodambakkam, Chennai 600024, Tamilnadu has lost the Company's land property Sale Deed Documents property situated at Pudupattinam Village & Vittalapuram Village to a total extent of 10 Acres and another land property situated at pudupattinam Village & Vittalapuram Village, total extent Is 6.5 acres. Documents to total extent 16.5 acres were lost on 5.7.2019 while travelling near T.Nagar Bus Stand.

Company's Sale Deed Documents nos are

1.3249/ 2004 5. 3251/ 2004
2.3250/ 2004 6. 438/ 2001
3.72 / 2001 7. 3248 / 2004
4.1453/ 2001 8. 2990 / 2000

registered at Thirukazhikundram Sub Registrar Office, Thirukazhikundram.

The above mentioned documents were lost and could not be traced. Those who find or In possession of the said documents is / are requested to inform or hand over the same to my client or to my address mentioned below.

S.SELVAM,
Advocate & Notary
26-J Block, venkatapuram
Saidapet, Chennai-15
Cell- 9790706555/ 9345574555

ESSAR

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 56, புதிய எண். 77, C.P. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை–600 018, தமிழ்நாடு, இந்தியா.
Tel.: +91-44-2499 5340 Fax: 91 44 2535 1272
CIN: L65990TN2005PLC071791
Email id: eslinvestors@essar.com • Website: www.essar.com

அறிவிப்பு

செக்யூரிடீஸ் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29 மற்றும் கட்டுப்பாடு 47ன்படி, நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இதர அலுவல்களுக்கு இடையே, ஜூன் 30, 2019ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 13, 2019 அன்று எஸ்ஸார் ஹவுஸ், 11, கே.கே. மார்க், மகாலட்சுமி, மும்பை–400 034, மகாராஷ்டிராவில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.essar.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.

எஸ்ஸார் செக்யூரிடீஸ் லிமிடெட்டுக்காக

தேதி: ஆகஸ்ட் 2, 2019
இடம்: மும்பை

ஒப்பம்/–
லக்ஷ்மி ஜோஷி
கம்பெனி செயலாளர்

சிகால் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சவுத் இந்தியா ஹவுஸ், 73, ஆர்மேனியன் தெரு, பாரிமுனை, சென்னை - 600 001
CIN: L51909TN1955PLC002431 Website: www.sical.com e-mail: secl@sical.com

30 ஜூன், 2019 அன்று முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

[இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015ன் கட்டுப்பாடு 47[1][b] க்கு இணங்க]

ரூ.லட்சத்தில் பங்கு விவரங்கள் தவிர

வ. எண்.	விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.06.2019 (தணிக்கை செய்யப்படாதது)	முடிந்த காலாண்டு 31.03.2019 (தணிக்கை செய்யப்பட்டது)	முடிந்த காலாண்டு 30.06.2018 (தணிக்கை செய்யப்படாதது)	முடிந்த ஆண்டு 31.03.2019 (தணிக்கை செய்யப்பட்டது)
1.	செயல்பாடுகளிலிருந்து வருமானம்	36,207	42,645	32,351	1,52,494
2.	வரிக்கு முன் லாபம்	388	1,959	733	4,253
3.	வரிக்கு பின் நிகர லாபம்	279	1,258	226	2,401
4.	விரிவான மொத்த வருமானம் காலத்திற்கானது [காலத்திற்கான லாபம் உள்ளடங்கியது மற்றும் இதர விரிவான வருமானம்]	121	616	338	1,826
5.	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (மதிப்பு ரூ.10/ ஒவ்வொன்றும் முழுவதும் செலுத்தப்பட்டது)	5,854	5,854	5,562	5,854
6.	மற்ற சமபங்கு	54,394	54,394	46,930	54,394
7.	ஒவ்வொரு பங்கிற்கான வருவாய் [ரூ.10/ ஒவ்வொன்றும்]				
	- அடிப்படை	0.44	1.09	0.72	3.64
	- இளக்கிய	0.44	1.09	0.72	3.64

குறிப்புகள்:

அ) மேற்குறிப்பிட்ட விரிவான, ஒன்று சேர்க்கப்பட்ட ஜூன் 30, 2019 அன்று முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகள் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015 கட்டுப்பாடு 33ன் படி ஆகஸ்ட் 2, 2019 அன்று இயக்குநர்களின் தணிக்கைக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு இயக்குநர் குழுமத்தால் அன்று ஒப்புதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்டது. ஒன்று சேர்க்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகள் தேசிய பங்குச் சந்தை (www.nseindia.com), மும்பை பங்குச் சந்தை (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் (www.sical_in/investors/financial results) இணையதள முகவரிகளில் கிடைக்கும்.

ஆ) சிகால் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்டின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் (தனிப்பட்ட விவரங்கள்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு 30.06.2019 (தணிக்கை செய்யப்படாதது)	முடிந்த காலாண்டு 31.03.2019 (தணிக்கை செய்யப்பட்டது)	முடிந்த காலாண்டு 30.06.2018 (தணிக்கை செய்யப்படாதது)	முடிந்த ஆண்டு 31.03.2019 (தணிக்கை செய்யப்பட்டது)
செயல்பாடுகளிலிருந்து வருமானம்	31,290	37,917	26,982	1,30,315
வரிக்குமுன் லாபம்	992	1,584	1,163	5,173
லாபம் காலத்திற்கானது	649	1,006	513	3,053

இடம் : பெங்களூரு
தேதி : 02.08.2019

போர்டின் உத்தரவின்படி
R. ராம் மோகன்
தலைவர்